தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆடி 26, 2011 ஆகஸ்ட் 11, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
> *வகுத்தலும் வல்ல தரசு."*

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

1. இரங்கல் தீர்மானம்

தமிழக முன்னாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழக முன்னாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.*

"தமிழ்நாட்டின் ஆளுநராக 17—2—1988 முதல் 24—5—1990 வரை பணியாற்றிய டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 10—8—2011 அன்று தனது 90—வது வயதில் இயற்கை எய்தியது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொண்ணா துயரமும் கொள்கிறது.

1948ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக தம் பணியைத் துவக்கிய டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் மத்திய அரசின் செயலாளராகவும், முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் முதன்மைச் செயலாளராகவும், இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதுவராகவும், மகாராஷ்டிரா மாநில ஆளுநராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும் சிறப்புற பணியாற்றியவர். அவர் தமிழ்நாட்டில் ஆளுநராகப் பணியாற்றிய காலத்தில், குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டபோது,

திறம்பட நிர்வாகத்தை நடத்தியவர் ஆவார். அவர் பல்வேறு புத்தகங்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

24—

கட்டட வசதி

***1458**—**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் காவல் நிலையம் அரசுக்குச் சொந்தமான சமுதாயநலக் கூடக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக 40 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, 23—9—2010இல் அரசாணை வழங்கப்பட்டது. 24—12—2010இல்